# අයවැය කාරක සභා අවස්ථා විවාදය - 2019

# குழு நிலை விவாதம் - 2019

# Committee Stage Debate - 2019

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## ප්‍රගති වාර්තාව - 2018

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## முன்னேற்ற அறிக்கை - 2018

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT

## Progress Report - 2018


මහලේකම් කාර්යාලය
කොළඹ 01.

செயலகம்
கொழும்பு 01.

The Secretariat
Colombo 01.

# உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**


**01.** திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள் 01

1.1. அறிமுகம் 01

1.2. நோக்கு 01

1.3. செயற்பணி 01

1.4. குறிக்கோள் 01

1.5. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் 02

1.6. திணைக்களம் பெற்றுள்ள மதிப்பு மற்றும் விருதுகள் 02

**02.** நிதி நிருவாகம் 03

**03.** பௌதீகச் செயலாற்றுகை 05

3.1 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல் 05

3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கான பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வளர்களைவ வலுவூட்டுதல் 06

3.3 அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்கு பொதுத் திறைசேரியின் அறிக்கையை சமர்ப்பித்தலும் அந்தக் கூட்டங்களில் பங்குபற்றுதலும் 07

3.4 அரசாங்கத் துறைகளிலுள்ள உள்ளக கணக்காய்வு அலகுகளை கூட்டிணைத்தலும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுதலும். 08

3.5 அபிவிருத்தி கருத்திட்டங்களின் முகாமைத்துவக் கணக்காய்வினை வலுவூட்டுதலும் 10

3.6 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் 12

**04.** மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம 16

4.1 திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு 16

4.2 2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு பதவியினர் 17

4.3 2018 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் திறன்விருத்தி நடவடிக்கைகள் 18

4.3.1 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள் 18

4.3.2 2018 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள் 21

**05.** 2019 ஆம் ஆண்டுக்கான உத்தேச செயற்பாடுகள் 23

# 01. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள்

## 1.1 அறிமுகம்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டது.

மேலும் இந்தத் திணைக்களம் 2017.06.09 ஆம் திகதிய 2022/34 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அதேவேளையில், 2018.05.12 ஆம் திகதிய 2070/56 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மீண்டும் நிதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## 1.2 நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்

## 1.3 செயற்பணி

அரச துறையிலுள்ள அமைப்புக்களில் உள்ளக நிருவாகத்தை வலுப்படுத்துவதினூடாக எதிர்பார்க்கப்படும் வெயலாற்றுகையை அடைந்துகொள்வதற்காக திறைசேரியின் திணைக்களம் என்ற வகையில் உதவியையும் வழிகாட்டலையும் வழங்குதல்.

## 1.4 குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.
2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.
3. உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை விருத்திசெய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.
4. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.
5. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகளையும் சம்பவங்களையும் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

## 1.5 முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவிகளை வழங்குவது இந்தத் திணைக்களத்தின் பிரதான பணியாக இருக்கின்ற அதேவேளையில், அதன் பிரகாரம் அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டுவதற்காக பின்வரும் பணிகள் இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

3. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிவையும் திறன்களையும் விருத்தி செய்தல்.

4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

5. அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுமதுலும் திறைசேரி அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தலும்

6. அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தலும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுதலும்.

7. அமைச்சின் கீழுள்ள அதன் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை மேற்பார்வை செய்தலும்.

8. விசேட விசாரணை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 1.6 திணைக்களம் பெற்றுள்ள மதிப்பு மற்றும் விருதுகள்


இலங்கைப் பாராளுமன்றத்தில் அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் மேற்பார்வைக்கு உட்படுகின்ற நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றுகை பற்றி மதிப்பிடுவதற்கான விருது வழங்குதலின் போது 2016 ஆம் நிதியாண்டின் பொருட்டு நிதி நிறுவன முகாமைத்துவம் மற்றும் அரச நிறுவனங்களின் செயலாற்றுகை பற்றி உயர் மட்ட செயற்பாட்டு மட்டத்தை அடையப்பெற்ற அரச நிறுவனங்களிடையே முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் இருந்ததன் காரணமாக 2018 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியன்று தங்க விருதைப் பெற்றுக்கொண்டது.

# 02. நிதி நிருவாகம்

2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் 324 செலவினத் தலைப்புகளில், நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 மற்றும் கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

2018.12.31 ஆம் திகதி வரை அந்த ஏற்பாடுகளை செலவு செய்த விதம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செலவின விபரம் | வருடாந்த வரவுசெலவு ஒதுக்கீடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | நி.ஓ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல் / மேலதிக ஒதுக்கீடு (ரூபா) | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் (அ)** | **49,050,000** | **480,000** | **-** | **49,530,000** | **45,934,890** | **3,595,110** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 35,210,000 | | (210,000) | 35,000,000 | 31,922,902 | 3,077,098 |
| ஏனைய செலவினம் | 13,840,000 | 480,000 | 210,000 | 14,530,000 | 14,011,988 | 518,012 |
| | | | | | | |
| **மூலதனச் செலவினம் (ஆ)** | **3,400,000** | **-** | **-** | **3,400,000** | **3,216,136** | **183,864** |
| 2002 இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் | 100,000 | | 143,138 | 243,138 | 243,138 | - |
| 2003 வாகனங்கள் | 300,000 | | | 300,000 | 162,157 | 137,843 |
| 2103 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 500,000 | | (143,138) | 356,862 | 356,859 | 4 |
| 2401 திறன் விருத்தி | 2,500,000 | | | 2,500,000 | 2,453,983 | 46,017 |
| **முழு மொத்தம் (அ)+ (ஆ)** | **52,450,000** | **480,000** | **-** | **52,930,000** | **49,151,026** | **3,778,974** |



## அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

2018 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட எல்லை (ரூ.) | உண்மைச் செலவினம் (ரூ.) |
|---|---|---|
| **உச்ச செலவின எல்லை** | 4,500,000 | 3,659,455.40 |
| **ஆகக் குறைந்த கிடைப்பனவு எல்லை** | 2,150,000 | 2,161,549.56 |
| **ஆகக் கூடிய வரவு மீதி எல்லை** | 10,000,000 | 9,173,834.52 |

# 03. பௌதீக செயலாற்றுகை

## 3.1 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

உள்ளகக் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் கணக்காய்வு சம்பந்தமான காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது தொடர்ச்சியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த நோக்கத்திற்காக 2018.12.31 ஆம் திகதி வரை இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| இடம்பெற்ற திகதி | செயலமர்வின் தலைப்பு | இலக்குவைக்கப்பட்ட குழுக்கள் |
|---|---|---|
| 2018.03.07 மற்றும் 08 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்காக உள்ளகக் கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு | மாத்தறை, ஹம்பாந்தோட்டை, காலி, மொனராகலை, பதுளை மாவட்டச் செயலகங்களிலுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பதவியினர் |
| 2018.03.19 மற்றும் 20 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்காக உள்ளகக் கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு | அநுராதபுரம், புத்தளம், பொலனறுவை மாவட்டச் செயலகங்களிலுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பதவியினர் |
| 2018.05.11 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2018.06.13 | உள்ளகக் கணக்காய்வின் தற்போதைய போக்கு மற்றும் அதன் தன்மை பற்றிய பயிற்சிச் செயலமர்வு | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |

| | | |
|---|---|---|
| 2018.08.30 | புதிய கணக்காய்வுச் சட்டம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2018.11.15 | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2018.12.20 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்காக உள்ளகக் கணக்காய்வு பற்றிய பயிற்சிச் செயலமர்வு | களுத்துறை கம்பஹா கொழும்பு இரத்தினபுரி மாவட்டச் செயலகங்களிலுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலுள்ள பதவியினர் |

## 3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்காக திறைசேரி பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வினை வலுவூட்டுதல்.

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள DMA/2009(1) மற்றும் 2009.06.09 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் குறைந்தபட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் குறைந்தபட்சம் வருடத்திற்கு 04 நடாத்தவேண்டிய அதேவேளையில் வருமானத்தை உழைக்கின்ற திணைக்களங்கள் குறைந்தபட்சம் 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும். இதற்காக திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் குழுவின் உறுப்பினராக பங்குபற்றுவார். 2018 ஆம் ஆண்டில் சகல அமைச்சுக்கள் மாவட்ட செயலகங்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வருமான மற்றும் ஏனைய திணைக்களங்களுக்காகவும் இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ள அதேவேளையில் அதுபற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அந்த உத்தியோகத்தர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் வினைத்திறனுடனும் தொடர்ச்சியாகவும் நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று அமைச்சுக்கள் மற்றும் அவற்றின்கீழுள்ள திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளை வலுவூட்டுவதற்கும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைககள் மற்றும் அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விசேட விடயங்கள் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கும்போது தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குழுக்களின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்வதன்மூலம் அரசாங்கத் துறையிலுள்ள முகாமைத்துவ நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்கும் பங்களிப்பினை வழங்கியுள்ளது.

முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2018.12.31 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| தொடர் இல. | நிறுவனங்கள் | **எண்ணிக்கை** | **பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | அமைச்சுக்கள் | 43 | 167 |
| 2. | மாவட்ட செயலகங்கள் | 25 | 79 |
| 3. | வருமானத் திணைக்களங்கள் (நிதி அமைச்சின் கீழுள்ள) | 4 | 21 |
| 4. | ஏனைய திணைக்களங்கள் | 29 | 65 |
| 5. | விசேட செலவின அலகுகள் | 10 | 27 |

## 3.3 அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்கு பொதுத் திறைசேரியின் அறிக்கையைச் சமர்ப்பித்தலும் அந்தக் கூட்டங்களில் பங்குபற்றுதலும்.

அரசாங்க கணக்குகள் பற்றிய செயற்குழுவினால் அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவை அழைக்கின்ற சந்தர்ப்பத்தில் அதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் பொதுத்திறைசேரியின் அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும் இந்தத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதன்பிரகாரம் 2018.12.31 ஆம் திகதியளவில் அரசாங்க கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டங்களுக்கான பங்குபற்றல் பின்வருமாறு.

| தொடர் இல. | நிறுவனங்கள் | **பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | அமைச்சுக்கள் | 05 |
| 2. | திணைக்களங்கள் | 09 |
| 3. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 04 |
| 4. | மாவட்ட செயலகங்கள் | 01 |
| 5. | ஏனையவை | 01 |
| **மொத்தம்** | | **20** |

## 3.4 அரசாங்கத் துறைகளிலுள்ள உள்ளக கணக்காய்வு அலகுகளை கூட்டிணைத்தலும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுதலும்.

➢ **அமைச்சுக்கள் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு 2017/18**

உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றுகையை மேம்படுத்துவதன் ஊடாக அரசாங்கத் துறைகளில் வினைத்திறன்மிக்கதும் செயற்றிறன்மிக்கதுமான உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டினுள் ஆரம்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை பற்றிய மீளாய்வு அந்த வருடத்தினுள் பூர்த்திசெய்ய முடியாமற்போன ஐந்து அமைச்சுக்களுக்காகவும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டன.

மீளாய்வினூடாக தோன்றிய விடயங்களுக்கு அமைவாக

- உள்ளகக் கணக்காய்வு அலகுகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக தொடர்புடைய பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு சமர்ப்பித்தல்.
- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது நடவடிக்கைத்திட்டத்தின் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குதலும் அதற்கு அமைவாக கணக்காய்வினை மேற்கொள்வதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது.

➢ **மாவட்ட செயலகங்கள் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு**

மாவட்ட செயலகங்களிலுள்ள உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கையை மீளாய்வு செய்தல், 24 மாவட்ட செயலகங்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் அவற்றின் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக நடாத்துவதற்காக சகல மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கும் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வின்போது தோன்றிய விடயங்களுக்கு அமைவாக மாவட்ட செயலகங்களில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்காக மாவட்ட செயலகங்களின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டிய விடயங்கள், அதேபோன்று மாவட்ட செயலகங்களில் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களிடையே அறிவினைப் பரிமாற்றிக்கொள்வதற்காக எதிர்காலத்தில் இந்தத் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் மாவட்ட செயலகங்கள் தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று பணிப்பாளர்க்கு (மாவட்ட செயலகம்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **அமைச்சுக்கள் சம்பந்தமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு - 2018**

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அமைச்சுக்கள் பற்றிய மீளாய்வினைக் கவனத்திற்கொண்டு அந்த நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தி அமைச்சின்கீழுள்ள திணைக்களங்களுடன் மீளாய்வினை மேற்கொள்ளுதல் 2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் பல சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள் மாற்றமடைந்தமை, அமைச்சுக்களின் விடயப்பரப்பு திருத்தப்பட்டமை, அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டமை போன்ற பிரச்சினைகளின் காரணமாக திட்டமிட்டவாறு அமைச்சுக்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு பூர்த்திசெய்ய முடியாமற்போன அதேவேளையில் 07 அமைச்சுக்களின் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக அவற்றின்கீழுள்ள 06 திணைக்களங்கள் பங்குபற்றின.

- **புதிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளித்தல்**

அமைச்சுக்கள் மற்றும் மாவட்ட செயலகங்களின் மீளாய்வின்போது அடையாளம் காணப்பட்ட பிரதான விடயமாக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களாக புதிய நியமனங்களைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக தமது நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளும்பொருட்டு தேவையான அடிப்படை அறிவை வழங்கும்நோக்கில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள புதிய பிரதான உள்ளக கணக்காய்வாளர்களுக்கு அன்றாடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களும் அவற்றை முறையாக மேற்கொள்ளவேண்டிய விதம் பற்றியும் அடிப்படை விளக்கங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2018.06.28 ஆம் திகதியன்று ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இதற்காக 22 பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் பங்குபற்றினர்.

- **உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கூட்டிணைத்தல்.**

இலங்கையில் அரசாங்கத் துறையினுள் காணப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வு முறைமைகளை ஆராய்ந்து தேவையான மேம்படுத்தல்களுக்காக தேவையான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்காக அரச துறையினுள் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய பொறுப்பினைவகிக்கின்ற நிறுவனம் என்றவகையில் தேவையான தகவல்களை வழங்குவதும் அதற்காக அமைச்சின்மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நிரல் அமைச்சுக்களில் காணப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுக்காக 03 அமைச்சுக்களின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் (சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் பற்றிய அமைச்சு) தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல், அதேபோன்று நிறுவனரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறைக்கு உள்ளகக் கணக்காய்வின்மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளிலுள்ள முக்கியத்துவம் பற்றி ஆராய்வதற்காக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தையொன்றை நடாத்துவதற்கும் தேவையான கூட்டிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.5 அபிவிருத்தி கருத்திட்டங்களின் முகாமைத்துவக் கணக்காய்வினை வலுவூட்டுதல்

### 3.5.1 வெளிநாட்டு நிதியிடலைக்கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

ஒரு அமைப்பின் உபாய ரீதியான நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக கருத்திட்ட முகாமைத்துவத்தின்போது ''உள்ளகக் கணக்காய்வு'' மிக விசேடமான பணியொன்றை ஆற்றுகின்றது. அதன்பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் வெளிநாட்டு நிதியிடலைக்கொண்டதாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டம் சம்பந்தமாக அவற்றின் உள்ளக நிர்வாகத்தை வலுவூட்டுவதற்காகவும் கவனத்தைச் செலுத்தி நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டுள்ளன.

இதன்போது விசேடமாக உள்ளக நிர்வாகத்தை வலுவூட்டுவதன் மூலம் இலக்குவைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதும் நன்மைபெறும் மக்களுக்கு எதிர்பார்க்கப்படும் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பொருளாதார சிக்கனத்தைக்கொண்ட கருத்திட்டங்களுக்கு நிதியத்தைப் பயன்படுத்துவதன்மூலம் உரிய கால எல்லைக்குள் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதும் இலக்காகக்கொள்ளப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் கருத்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வினை நிறுவனமயப்படுத்தி வலுவூட்டும்பொருட்டு தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் நிதியொழுங்குவிதி கோவையில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கருத்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு கருத்திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இணையாக செயற்பாட்டில் ஈடுபடும்பொருட்டு முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

- கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதனை வலுவூட்டும்பொருட்டு முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை 2/2016 வெளியிடப்பட்டது.
- கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வினை முறைமைப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை 1/2017 இன் மூலம் வழிகாட்டல்களை வெளியிடுதல்.
- கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களின் செயலாற்றுகை சம்பந்தமான பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல்.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கையினூடாக வெளிப்படுத்தப்படுகின்ற விசேட விடயங்கள் சம்பந்தமாக தேவையின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- ஐ.அ.டொ.10 மில்லியன்களுக்குக் குறைவான வெளிநாட்டு நிதியிடலைக்கொண்ட கருத்திட்டங்கள் சம்பந்தமான உள்ளக நிர்வாகத்தினை வலுவூட்டும்பொருட்டு மேற்கூறப்பட்ட கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் குறித்து அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு அனுப்புதல்.

## 3.5.2 2018 ஆம் ஆண்டின் இலக்கை அடைந்துகொள்ளுதல்

### 3.5.2.1 *கருத்திட்டத்தின் உள்ளக நிருவாகத்தை வலுவூட்டுதல்*

DMA 2/2016 முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையை வெளியிட்டு கருத்திட்ட உள்ளக கணக்காய்வாளர்கள் வெளிநாட்டு நிதியிடல்களைக்கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும்பொருட்டு சந்தர்ப்பத்தை வழங்குதல் கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வினை வலுவூட்டுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு விசேட நடவடிக்கையாகும். அதன்மூலம் மொத்தக் கருத்திட்டத்தினதும் செலவு ஐ.அ.டொ.10 மில்லியன்களைத் தாண்டிய வெளிநாட்டு நிதியிடல்களைக்கொண்ட சகல கருத்திட்டங்களுக்காகவும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை கருத்திட்டத்தின் நிரந்தர பதவியினருக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. அதன்பிரகாரம் தற்போது 28 கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர்கள் சேவையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுதவிர கருத்திட்ட செயலாற்றுகையை அதிகரிப்பதற்கும் முகாமைத்துவ அபிவிருத்திக்கும் உள்ளகக் கணக்காய்வினை வினைத்திறனுடன் பயன்படுத்தும்பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. உபாய ரீதியான நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக தரமானதும் பொருள்மயமானதுமான பங்களிப்பை உள்ளகக் கணக்காய்வாளர்களிடமிருந்து கருத்திட்ட பணிப்பாளர் உட்பட சிரேட்ட முகாமைத்துவத்திற்கு வழங்குவதனை சான்றுப்படுத்தும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை பற்றிய காலாண்டு ரீதியான முன்னேற்றத்தை பரிசீலனை செய்வதற்கும் செயலாற்றுகை தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளைக் கலந்துரையாடி பொருத்தமான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு விசேட முன்னேற்ற விசாரணைக் கூட்டங்களை நடாத்துதல்.
2. கருத்திட்ட சொத்து முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தும் முன் நடவடிக்கையொன்றாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடலைக்கொண்ட கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் பற்றிய தரவுத் தொகுதியொன்றைத் தயாரித்தலும் அதற்கு அமைவாக கருத்திட்டத்தின் இறுதியில் முறையான விதத்தில் அந்த சொத்துக்கள் உரிமை மாற்றப்படுகின்றதா என்பது பற்றிய செயற்பாடுகளையும் பின்னூட்டல்களையும் மேற்கொள்ளுதல்.
3. அபிவிருத்திக் கருத்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள DMA/05 சுற்றறிக்கையை இற்றைப்படுத்தி மேம்படுத்துவதற்காக நடவடிக்கையெடுத்தல் (தொடர்புடைய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது).
4. உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் பற்றிய சுயாதீனத்தன்மை, அதிகாரம் மற்றும் அதிகாரத்தன்மை அதேபோன்று ஆலோசனையில் சுயாதீனத்தன்மையை கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டு நடவடிக்கையின்போது கருத்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு வழங்கும்பொருட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளித்தலும் அது தொடர்பான வழிகாட்டல் ஆவணங்களை வழங்குதலும்.
5. ஐ.அ.டொ.10 மில்லியனுக்குக் குறைவான வெளிநாட்டு நிதியிடல் கருத்திட்டங்களின் கணக்காய்வுக்காக அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களை அனுப்புதலும் முன்னேற்றம் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

#### 3.5.2.2 ***கருத்திட்டத்தின் விசேட விசாரணை***

அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக கீழேகுறிப்பிடப்பட்டுள்ள விசேட விசாரணை நடவடிக்கைகளும் தற்போது இந்தத் திணைக்களத்தினால் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

- கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி கருத்திட்டத்தில் வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை

## 3.6 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்

### 3.6.1 விசேட விசாரணை நடவடிக்கை

நிதியமைச்சின் கௌரவ அமைச்சருக்கும் அதேபோன்று நிதியமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கின்ற முறைப்பாடுகள் நிதியமைச்சின் செயலாளரின் கட்டளையின்படி பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்காக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளின் அறிக்கையொன்று திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய அமைச்சின் செயலாளருக்கு அல்லது தொடர்புடைய நிறுவனத்தின் தலைவருக்கு அனுப்பப்படுகின்ற அதேவேளையில் விசாரணைகளுக்கு அமைவாக வெளிப்படுத்தப்படுகின்ற குறைபாடுகளும் மோசடிகளும் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுப்பது இதன் நோக்கமாகும்.

2018 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை 18 ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் இந்தக் காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்ட 11 முறைப்பாடுகளுக்காக தொடர்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டுள்ள விசேட விசாரணைகள்**

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 1 | தபால் திணைக்களம் | நாட்டிலுள்ள சகல தபால் அலுவலகங்களிலும் உள்ள மோசடிகள் |
| 2 | தபால் திணைக்களம் | தபால் திணைக்களத்தின் ஊழல்கள் மற்றும் அநுராதபுர தபால் தொகுதியில் உள்ள பலவீனமான நிர்வாகம் மற்றும் நிதியின் முறைகேடான பயன்பாடு. |
| 3 | தேசிய விஞ்ஞான மன்றம் | அரச நிதியைச் சூரையாடுதல் |
| 4 | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | லாங்காபுத்ர வங்கியின் ஹம்பாந்தோட்டை கிளையில் ஏற்பட்டுள்ள நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் |
| 5 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | பதிவாளரின் ஊழல் மற்றும் மோசடி பற்றியது |
| 6 | புனர்வாழ்வு அமைச்சு | புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் ஊழல் மற்றும் மோசடி |
| 7 | கொழும்புத் துறைமுகக் கருத்திட்டம் | கருத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட வாகனங்கள் சம்பந்தமானது |
| 8 | இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | மக்களின் நிதியை முறையற்ற விதத்தில் சூரையாடியமை |
| 9 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | கேகாலை பிரதேசத்திலுள்ள பிரதேச வருமான அலுவலகத்தில் வருமானத்தைச் செலுத்துவதற்கு உரிய வியாபாரிகளின் கடிதக் கோப்புகளை நிதியைப் பெற்றுக்கொண்டு நிறுவனத்திலிருந்து அகற்றியமை |
| 10 | இலங்கை தர நிறுவனம் | உத்தியோபூர்வ வாகன உரிமை இல்லாத உத்தியோகத்தர்களினால் வாகனத்திற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை பற்றியது. |
| 11 | சுங்கத் திணைக்களம் | வாகனத்தின் குறைமதிப்பீடு |
| 12 | மதுவரித் திணைக்களம் | பிரதான மதுவரி பரிசோதகர் சம்பந்தமானது |
| 13 | கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனம் | மோசடி மற்றும் முறைகேடு அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை |
| 14 | நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | ஊழல் மற்றும் முறைகேடுகள் |
| 15 | புகையிரதத் திணைக்களம் | புகையிரத கணக்காளரினால் முறையற்ற விதத்தில் கொடுப்பனவுகளை மேற்கொண்டமை |
| 16 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | சட்டதிட்டங்களை மீறிச் செயற்பட்டமை |
| 17 | சுங்கத் திணைக்களம் | 03 கிலோ தங்கம் சம்பந்தமான விசாரணை |
| 18 | மலையக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு | உரிய பெறுகை செயல்முறையின்றி திறைசேரி நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை |

**2018.12.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்று தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள்**

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 1 | தபால் திணைக்களம் | யாழ்ப்பாண அலுவலகத்தில் உள்ள முறைகேடுகள் |
| 2 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | விசாரணைப் பிரிவிலுள்ள சிரேட்ட உதவி ஆணையாளர் சம்பந்தமானது. |
| 3 | தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் குழு | பொதுமக்கள் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை மற்றும் வரித் தொகையைப் புறக்கணித்தமை பற்றிய முறைப்பாடு |
| 4 | சுங்கத் திணைக்களம் | நீதிமன்ற வழக்கு இலக்கம் -AR-82/2017/(B)193/(17)<br>சுங்கக் கோப்பு இலக்கம் - CIB/INV/108/2016 |
| 5 | சுகாதார அமைச்சு | சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் (தொற்றா நோய்) மோசடியான செயற்பாடுகள் |
| 6 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | தொடர்ச்சியான சேவைக்காலத்தைக்கொண்டிராத மோசடியைக்கொண்டதாக அரசாங்க சேவையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டமை |
| 7 | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறுகின்ற மோசடி பற்றி அறிக்கையிடல் |
| 8 | இலங்கை புகையிரதத் திணைக்களம் | அரச ஊழியர் சொத்துக் கடன் தொகையில் அரசாங்கத்தின் பங்கைச் செலுத்தாமை பற்றியது |
| 9 | தபால் திணைக்களம் | தபால் திணைக்களத்தில் கோடிக்கணக்கான நிதி மோசடியை மறைத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை |
| 10 | நாரா நிறுவனம் | முகாமைத்துவத்திலும் நிர்வாகத்திலும் உள்ள பலவீனத்தின் காரணமாக நாரா நிறுவனம் தற்போது அடைந்துள்ள சீரழிவு சம்பந்தமானது |
| 11 | இலங்கை தர நிறுவனம் | உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கை முறைமைக்குப் புறம்பாக ஆட்சேர்ப்புச் செய்தமை மற்றும் விசேட சலுகைகளை வழங்கியமை |

இந்த விசாரணை நடவடிக்கை 2018 ஆம் ஆண்டினுள் முடிவுருத்த முடியாமற்போன போதிலும் அவற்றில் பெரும்பாலானவை இறுதிக் கட்டம் வரை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

### 3.6.2 விசேட கணக்காய்வு நடவடிக்கை

**அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கின் விசேட கணக்காய்வு**

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் நீண்டகாலமாக இருந்துவருகின்ற தீர்க்கப்படாத கடன் நிலுவைகள் சம்பந்தமான விசேட கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்காக பல்வேறு அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட நிறுவனங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றிடமிருந்து அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டில் 155 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்குகளின் தரவுகளை உள்ளடக்கியதாக தரவுத் தொகுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.


அந்தத் தரவுகளை அவதானித்து 03 வருட காலத்திற்கும் மேலாக அறவிடப்படாத நிலுவைத் தொகை உள்ள நிறுவனங்களுக்கு அந்த ஒவ்வொரு கடன் நிலுவையையும் தீர்த்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விசாரணைக் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 369 இன் பிரகாரம் ரூ.10,000.00 ஐத் தாண்டாத கடன் நிலுவையை கைவிடும் அதிகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளபடியினால் அந்த சுற்றறிக்கையின் ஆலோசனைகளைப் பின்பற்றி கைவிடக்கூடிய கடன் நிலுவையை 2018.12.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அறிவித்து தொடர்புடைய நிறுவனங்களுக்கு விளக்கமளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

இந்தக் கடிதத்திற்கு 66 நிறுவனங்களிலிருந்து பதில்கள் அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில் அந்த நிறுவனங்களினால் கடன் நிலுவையைத் தீர்த்துக்கொள்வதற்கு பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | தொகை |
|---|---|
| செலுத்தி முடிக்கப்பட்டுள்ள கடன் நிலுவை | ரூ. 8,565,275.59 |
| சட்டநடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ள கடன் நிலுவை | ரூ. 13,231,307.34 |
| பதிவழிப்பதற்கு அனுமதிபெறப்பட்டுள்ள மற்றும் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள கடன் நிலுவை | ரூ. 5,649,573.10 |
| தவணை ரீதியில் அறவிடப்பட்டு வருகின்ற கடன் நிலுவை | ரூ. 6,962,669.04 |
| ஒழுக்காற்று விசாரணையின் காரணமாக இதுவரை அறவிட்டுக்கொள்ளாத கடன் நிலுவை | ரூ. 900,242.54 |

## 04. மனித வள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம்

### 4.1 2018.12.31ஆம்திகதி திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




* பி. பொ மு. உ - பிரதான பொது முகாமைத்துவ உதவியாளர் * அ.உ. - அபிவிருத்தி உத்தியோகத்தர் * பொ மு. உ - பொது முகாமைத்துவ உதவியாளர்

## 4.2 பதவியினர்

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்தத் திணைக்களத்தின் பணிகள் விரிவடைந்தமையின் காரணமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/1160/II மற்றும் **2018.08.03** ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவிகள் இரண்டை இல்லாதொழித்து இந்தத் திணைக்களத்திற்காக இலங்கை கணக்காளர் சேவையின் ஐ ஆம் தரத்திற்கு இரண்டு (02) பணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டன.

### 2018.12.31 ஆம் திகதியில் பதவியினர்

| பதவி | பதவியணி | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| **பணிப்பாளர் நாயகம்** | 01 | 01 | - |
| **மேலதிகப் பணிப்பாளர் நாயகம்** | 01 | 01 | - |
| **பணிப்பாளர் (இ.நி.சே.)** | 01 | **01** | - |
| **பணிப்பாளர் (இ.க.சே.)** | **07** | **07** | - |
| **பணிப்பாளர் (இ.தி.சே.)** | 02 | 02 | - |
| **உதவிப்/ பிரதிப் பணிப்பாளர் (இ.க.சே.)** | **05** | **04** | 01 |
| **ஆராய்ச்சி உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர்** | 09 | 08 | **01** |
| **பொது முகாமைத்துவ உதவியாளர்** | 14 | 14 | - |
| **சாரதி** | 07 | 02 | 05 |
| **அலுவலகப் பணி உதவியாளர்** | 06 | 05 | 01 |
| **மொத்தம்** | **53** | **45** | **08** |

## 4.3 2018 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் திறன்விருத்தி நடவடிக்கைகள்

### 4.3.1 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள்

| தொடர் இல. | அலுவலரின் பெயர் | பதவி | காலம் | பயிற்சி கற்கைநெறி | புயிற்சிபெற்ற நாடு |
|---|---|---|---|---|---|
| 1. | Mrs. M.A.K.P. Wijewantha | உதவிப் பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 2. | W. Wimalasena | பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 3. | H.M.S. Dharmawardane | பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 4. | W.M.D. Wijebandara | உதவிப் பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 5. | Ms. B.T.N. Mali | உதவிப் பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 6. | Ms. K.P.G.U. Kariyawasam | உதவிப் பணிப்பாளர் | 16.01.2018 - 23.01.2018 | International Programme on Management Auditing for the Public Sector International Auditors at Open University of Malaysia | மலேசியா |
| 7. | Mr.W.M.D. Wijebandara | உதவிப் பணிப்பாளர் | 25.02.2018 - 04.03.2018 | Workshop on Implementing Sustainable E- Government | சிங்கப்பூர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | Solutions | |
| 8. | Mrs. S.A.C. Kulathilaka | பணிப்பாளர் நாயகம் | 20.06.2018 - 23.06.2018 | ACIIA 1st Regional Forum for Public Sector Internal Auditors | பலிப்பைன் |
| 9. | Mrs. J.H. Fernando | பிரதிப் பணிப்பாளர் | 12.08.2018 - 19.08.2018 | Programme on Planning, Implement ion, Monitoring & Evaluation | மலேசியா |
| 10. | Mr. A.N. Hapugala | பணிப்பாளர் | 02.09.2018 - 09.09.2018 | International Programme on Management Auditing for the Public Sector Auditors From 02nd -09th September 2018 in Malaysia | மலேசியா |
| 11. | Mr. M.R.G.A.B. Muthukude | பணிப்பாளர் | 02.09.2018 - 09.09.2018 | International Programme on Management Auditing for the Public Sector Auditors From 02nd -09th September 2018 in Malaysia | மலேசியா |
| 12. | Mrs. V.I. Dilhani | பிரதிப் பணிப்பாளர் | 02.09.2018 - 09.09.2018 | International Programme on Management Auditing for the Public Sector Auditors From 02nd -09th September 2018 in Malaysia | மலேசியா |
| 13. | Mrs. S.A.C. Kulathilaka | பணிப்பாளர் நாயகம் | 09.09.2018 - 14.09.2018 | 2018 Asian Evaluation week Making Evaluation work at the Country Level from 10-14 September | சீனா |
| 14. | Mrs. G.A.G.T. Ganepola | உதவிப் பணிப்பாளர் | 09.09.2018 - 19.09.2018 | Diploma in Public Procurement and Contract Administration Partial Fulfillment | ஜப்பான் |
| 15. | Mr. S.P.M.D. Wijewardane | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 09.09.2018 - 27.09.2018 | 2018 Seminar on Paperless Trade and Cross-border E-Commerce for Asia-Pacific Countries from 09 to 27 September 2018 China | சீனா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | Ms. W.K.P.H.N.S. Rodrigo | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 09.09.2018 - 27.09.2018 | 2018 Seminar on Chinese Language for officials from Developing Countries from September 7 to 27 at Beijing Chinese Language and Culture College | சீனா |
| 17. | Mr. W. Wimalasena | பணிப்பாளர் | 02.11.2018 - 15.11.2018 | 2018 Seminar on Trade Promotion of Asia Countries II | சீனா |
| 18. | Mrs. H.M.P.C. Kumarihamy | பணிப்பாளர் | 26.11.2018 - 30.11.2018 | Shanghai International Program for Development Evaluation Training (SHIPDET) Special Topic Course | சீனா |

### 4.3.2 2018 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புகள்

| தொடர் இல. | பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | நிறுவனம் | இடம்பெற்ற திகதி/ நாட்கள் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் மொழி அடிப்படைப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 2018.01.16 ஆம் திகதி முதலிருந்து வாரத்தில் செவ்வாய்க் கிழமை நாட்களில் 06 மாதங்கள் (03 மணித்தியாலங்கள்) | திரு. துசித் சந்திம - பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 2. | தமிழ் மொழி அடிப்படைப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 2018.01.16 ஆம் திகதி முதலிருந்து வாரத்தில் செவ்வாய்க் கிழமை நாட்களில் 06 மாதங்கள் (03 மணித்தியாலங்கள்) | திருமதி. எம்.ஜீ.என்.எஸ். மீகஸ்முல்ல - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 3. | தமிழ் மொழி அடிப்படைப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 2018.01.16 ஆம் திகதி முதலிருந்து வாரத்தில் செவ்வாய்க் கிழமை நாட்களில் 06 மாதங்கள் (03 மணித்தியாலங்கள்) | திரு. எம்.டி.ஆர்.பீ. சுரங்க - அலுவலகப் பணி உதவியாளர் |
| 4. | தமிழ் மொழி அடிப்படைப் பயிற்சி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 2018.01.16 ஆம் திகதி முதலிருந்து வாரத்தில் செவ்வாய்க் கிழமை நாட்களில் 06 மாதங்கள் (03 மணித்தியாலங்கள்) | திரு. ஓ.கே. தரிந்து திலங்க - அலுவலகப் பணி உதவியாளர் |
| 5. | இரண்டாவது தடைதாண்டல் பரீட்சை தொடர்பான கருத்தரங்கு | SDFL | 2018.01.06, 07 (02 நாட்கள்) | திருமதி நிம்மி ஷிரோமி ருத்ரிகோ - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 6. | Project Management & Proposal Training | மிலோதா நிறுவனம் | 2018.01.29 மற்றும் 30 (02 நாட்கள்) | திருமதி நிம்மி ஷிரோமி ருத்ரிகோ - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 7. | Project Management & Proposal Training | மிலோதா நிறுவனம் | 2018.01.29 மற்றும் 30 (02 நாட்கள்) | திருமதி. எம்.டி.எஸ்.எஸ் வீரசிங்ஹ - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 8. | Project Management & Proposal Training | மிலோதா நிறுவனம் | 2018.01.29 மற்றும் 30 (02 நாட்கள்) | திரு. ஜே.பீ. முதலிகே - பொது முகாமைத்துவ உதவியாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | Financial Regulations in the Public Sector | மிலோதா நிறுவனம் | 2018.02.07 மற்றும் 08 (02 நாட்கள்) | திருமதி கே.ஏ.ஐ. மாயாதுன்ன - பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | Financial Regulations in the Public Sector | மிலோதா நிறுவனம் | 2018.02.21, 22, 23 (03 நாட்கள்) | திருமதி எம்.ஏ. குசுமலதா - பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | Computerized Government Payroll System | மிலோதா நிறுவனம் | 2018.02.26, 27, 28 (03 நாட்கள்) | திருமதி எம்.டப்ளியு.ஏ.எஸ். ஷான்தமாலி - பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | Diploma in English for Junior Executive | மிலோதா நிறுவனம் | 23 ஜுலை – 06 ஆகஸ்ட் 2018 | திருமதி நிம்மி ஷிரோமி ருத்ரிகோ - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 13. | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பான பயிற்சி | மாவட்டச் செயலகம், கொழும்பு | 04-14 செப்டம்பர் 2018 | திருமதி டப்ளியு.ஏ.பீ.டீ விதானாரச்சி - பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 14. | Public Speaking Skills | மிலோதா நிறுவனம் | 26-28 செப்டம்பர் 2018 | திருமதி எச்.எம்.பீ.சீ. குமாரிஹாமி - பணிப்பாளர் |

## 05. 2019 ஆம் ஆண்டுக்கான உத்தேச செயற்பாடுகள்

**1.** உள்ளகக் கணக்காய்வு தொடர்பான புதிய வழிகாட்டல்களை வெளியிடுதலும் தற்போது வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை இற்றைப்படுத்தலும்.

1. இந்தத் திணைக்களத்தைத் தாபித்ததன் பின்னர் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான 07 வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ள அதேவேளையில் அந்த வழிகாட்டல்களை இற்றைப்படுத்தி திருத்தப்பட்ட வழிகாட்டல்களை வெளியிடும் தேவைப்பாடு காணப்படுகின்றபடியினால் கீழே குறிப்பிடப்படுகின்ற வழிகாட்டல் 02, 2019 ஆம் ஆண்டுக்கு உரியதாக திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
   - (i) 2009.06.09 திகதியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள DMA/2009(1) வழிகாட்டல் (முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 என்பதாக 2019.01.12 திகதியன்று புதிய சுற்றறிக்கையொன்றாக வெளியிடப்பட்டுள்ளது.
   - (ii) 2010.07.26 திகதிய வெளிநாட்டு நிதியைக்கொண்ட கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு சம்பந்தமாக வெளியிடப்பட்ட DMA/2010(5) வழிகாட்டி
2. உள்ளகக் கணக்காய்வுப் பணியை மிகவும் வினைத்திறனுடன் ஒரே முறையில் நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் பின்வரும் துறைகளுக்கு உரிய புதிய வழிகாட்டி மற்றும் சரிபார்த்தல் பட்டியலை (check list) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

❖ புதிய வழிகாட்டியை வெளியிடுதல்

- (i) விசேட விசாரணைகளை நடாத்துவதற்காக வழிகாட்டியொன்றை அறிமுகப்படுத்துதல்
- (ii) மாவட்ட செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வு சம்பந்தமாக வழிகாட்டியொன்றை அறிமுகப்படுத்துதல்.
- (iii) செயற்பாடுகள் மற்றும் கணணி சார்ந்த செயற்பாடுகளை கணக்காய்வினை அடிப்படையாகக்கொண்டு தொகுதி கணக்காய்விற்கு வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

❖ சரிபார்த்தல் பட்டியலை வெளியிடுதல்.

- (i) வவுச்சர்களை கண்காணிக்கும் சரிபார்த்தல் பட்டியல்
- (ii) தனியாள் கோப்புகளைக் கணக்காய்வு சரிபார்த்தல் பட்டியல்
- (iii) அரசாங்க சம்பளக் கொடுப்பனவு தொகுதியின் (GPS) கணக்காய்வினை சரிபார்க்கும் பட்டியல்

## 2. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டுதல்

தற்போது இந்தத் திணைக்களத்தினால் அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வு முறைமையை வலுவூட்டுவதற்காக செயலூக்கத்துடன் பங்குபற்றியபோதிலும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு தலையீடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இருப்பினும் இந்த நிறுவனங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை மேற்கொள்வதற்காக திறைசேரியிடமிருந்து ஏற்பாடுகள் / கட்டுநிதி வழங்கப்படுகின்ற அதேவேளை அந்த மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் மிகப் பாரிய தொகையொன்று அதற்காக செலவிடப்படுகின்றது. அதனால் அந்த நிறுவனங்களில் வலுவான உள்ளகக் கணக்காய்வு முறையொன்றைப் பேணும் தேவைப்பாடு பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதேவேளையில் அதற்கு இணங்கியதாக இந்தத் திணைக்களத்தினால் அந்த முறைமை தயாரிக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டும் நோக்கத்துடன் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வு அலகுகள் பற்றிய தரவுத் தொகுதியொன்றைத் தயாரித்தல்.
2. உள்ளூராடசி நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளுக்கு விசேடமாக உள்ளகக் கணக்காய்வு பற்றி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

## 3. உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பின்னூட்டல் செய்யும் முமையொன்றைத் தயாரித்தல்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(3) பிரிவின்கீழ் உள்ளகக் கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல அறிக்கைகளினதும் பிரதியொன்று இந்தத் திணைக்களத்திற்குக் கிடைத்தல் வேண்டும். அதன் பிரகாரம் இந்த சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் தோன்றுகின்ற உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் அதன் பரிந்துரைகளை அந்த நிறுவனத்தினால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை பின்னூட்டல் செய்யும் முறைமையொன்றை 2019 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.